அயலகத்தும் அண்ணாவின்
உயர்நினைவு தானே!
ஆட்சிநலத் திட்டமெலாம்
அவர்கனவு தானே?
"செயலகமே" அறிஞர்அண்ணா
கொடுத்தகொடை தானே!
செந்தமிழ்நா டென்றபெயர்
இனிக்கும்நறுந் தேனே!

கயலொடுவிற் புலியென,முக்
கொடிபறந்த நாட்டில்
களம்அதிரப் பகைசிதறப்
போர்ப்பரணி பாட்டில்!
"தயைமிகுந்த தலைவர்"எனத்
தமிழர்களின் வீட்டில்
"தளபதி"யின் புகழ்நிலைக்கும்
சரித்திரப்பொன் னேட்டில்!

... கவிச்சுடர் கவிதைப்பித்தன்.
4.2.. 2024.

( நல்லாட்சி நாயகர், மாண்புமிகு முதல்வர், கழகத் தலைவர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் ஸ்பெயின் நாட்டில், பேரறிஞர் அண்ணா படத்திற்கு மலர்வளையம் வைத்து, நேற்று (3.2.2024) நினைவஞ்சலி செலுத்தினார்.)





ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய அய்யப்பன்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கோவூர், பெரியபணிச்சேரி, தண்டலம், தரப்பாக்கம், இரண்டாம்கட்டளை ஆகிய ஊராட்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 27 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அங்கன்வாடி மையம், நியாய விலைக்கடை உள்ளிட்ட கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளனர்.

### கரூர் மாவட்டம் நெரூர் அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில்

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்!

கரூர், பிப். 5 -

இராஜராஜ சோழன் காலத்திற்குப் பிறகு சிதலமடைந்த தொன்மையான கோவில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்துவது கழக ஆட்சியில் தான் என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு 1000 ஆண்டுகள் தொன்மையான கரூர் மாவட்டம் நெரூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு திருப்பணியினை துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி.பிரபாகர், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம்(குளித்தலை). க.சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்). அறநிலையத் துறை இணை இயக்குனர் சி.குமரதுரை, கரூர் மாநகராட்சி மேயர் வெ.கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்து சமய அறநிலைத்துறை புது பொலிவுடன் வீறு நடைபோடுகிறது. முதலமைச்சர் தளபதி அவர்களின் உத்தரவுகளும் உற்சாகமும் தான் முக்கிய காரணமாகும். அந்த வகையில் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பொக்கிஷமான திருக்கோயில்களை பாதுகாக்க வேண்டும் என்ற உன்னத காரணத்திற்காக முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களுக்கு திரு பணிகள் நடத்துவதற்காக கடந்த இரண்டு நிதி யாண்டுகளில் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடி அரசு மானியமாக வழங்கினார். வரலாற்றில் ராஜராஜ சோழன் காலத்தில் தான் திருக்கோயில்களின் பணிகள் உயர்வு பெற்றது என்று சொல்வார்கள். அதே போல் ராஜராஜ சோழனுக்குப் பிறகு இந்த ஆட்சியில் தான் சிதிலமடைந்த திருக்கோயில்கள் திருப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்கு திரும்ப கொண்டு வருகின்ற ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இன்று அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ஒட்டு மொத்தமாக ரூ. 5 கோடி மதிப்பில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மூலவர் சன்னதி, அர்த்த மண்டபம் மற்றும் மகாமண்டபம் புனரமைத்தல் அதில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அம்பாள் சன்னதி புனரமைத்தல், பணிகளும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் சோபன மண்டபம் மீள கட்டும் பணி, ரூ.8

இலட்சம் மதிப்பீட்டில் மடப்பள்ளி புரனமைத்தல், ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் உப சன்னதிகள் வர்ணம் பூசும் பணி, ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் தெற்கு திருமதில் கட்டும் பணி, ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு வடக்கு கிழக்கு திருமதில் புனரமைத்தல் பணி, ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் ராஜகோபுரம் கல்காரம் புணர மைத்தல் பணி, ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் மீள கட்டுதல் பணி, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் யாகசாலை (அபிசேக மண்டபம் ) மீள கட்டுதல் பணி, ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சுப்பிரமணியர் சன்னதி கட்டுதல் பணி போன்ற 11 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்தத் திருக்கோயிலுக்கு எப்போது குடமுழுக்கு நடைபெற்றது என்ற குறிப்பு இல்லாமல் இருக்கிறது. ஆனால் மணி முத்தீஸ்வார் சன்னதிக்கு 2002 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடந்ததற்கான கல்வெட்டு உள்ளது. மூலவரான அகஸ்தீஸ்வரருக்கு எப்பொழுது குடமுழுக்கு நடந்தது என்ற குறிப்புகள் இல்லை.

இது போன்ற குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களை ஒவ்வொன்றாக கணக்கில் எடுத்து புனரமைக்கப்பட்டு வருகிறது. 400 ஆண்டுகள் பழமையான திருவெற்றார் ஆதி கேசவ பெருமாளுக்கு கூட இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நான் குடமுழுக்கு நடைபெற்று இருக்கிறது. நேற்றைக்கு கூட சென்னை மாமல்லபுரத்தில் தலசயன பெருமாள் கோயில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு நடைபெற்றுஉள்ளது. ஆண்டுக்கணக்கில் குடமுழுக்கு நடைபெறாத திருக்கோவில்களுக்கு எல்லாம் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் குடமுழுக்கு நடைபெற்று வருகிறது. இது வரை 1339 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. நேற்று மட்டும் 13 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்ற உள்ளது. அனைவரும் ஒருங்கிணைந்து திருப்பணிகளை விரைவுபடுத்தினால் வருகின்ற 2026 ஆண்டு ஜனவரி மாதம் இத்திருக் கோயிலின் குடமுழுக்கு நடைபெறும் என்றார்.

இந்நிகழ்வில் துணைமேயர் ப. சரவணன், உதவி ஆணையர்/செயல் அலுவலர் நா.நந்தகுமார், தக்கார்/ உதவி ஆணையர் பி.ஜெயதேவி, மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு தலைவர் கு.பால்ராஜ், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவரும் புனித தோமையார் மலை ஒன்றிய துணைச் செயலாளருமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு அண்ணா நகர் மற்றும் இந்திரா நகர் கிளைகளில் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டன. இதில் கிளைக் கழக செயலாளர் பி.எஸ்.ரமேஷ், வி.ஆர்.குமார், சுனில் மேத்யூ, கந்தசாமி, சுகுமார், ஏ.முருகன், ஆர். மணிவண்ணன், பி.கலைமணி, சி.இளஞ்செழியன், மாமுண்டி, தினேஷ், சுரேஷ்பாபு, ரவி, தில்லையரசன், தசரதன், ஆனந்த் பாபு, மாஸ்டர் விஜய், கதிர் அண்ணாமலை , பாலாஜி, பி.மலர்விழி, ஜே.நிலன் குமுதனி, எம்.புஷ்ப வாகினி, எஸ்.ராஜலட்சுமி, எம். லதா மோகன், ஆர்.தனலட்சுமி, கே.ரேவதி, எஸ்.மணிமேகலை, ஆனந்த ஜோதி, மோகன், அலீம், நாராயணன், மற்றும் மகளிர் அணி, இளைஞரணி கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் சிறப்பித்தனர்.

### தூத்துக்குடிக்கு - இன்று

# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!





தூத்துக்குடி, பிப். 5 -

தி.மு.க நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு இன்று தூத்துக்குடி வருகை தருவதால் பொது நலனில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர்கள் திருமதி.பி.கீதாஜீவன், அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2024 ல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். குழுவின் உறுப்பினர்களாக டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.இராஜா, கோ.வி.செழியன்.எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன்.எம்.எல்.ஏ., கே.ஆர்.என்.ராஜேஸ்குமார்.எம்.பி., எம்.எம்.அப்துல்லா.எம்.பி., திருமதி. பிரியா டாக்டர்.எழிலன் நாகநாதன்.எம்.எல்.ஏ., சென்னை மேயர் ஆகியோர் உள்ளனர்.

இந்த தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் நேரில் சென்று பல்வேறு தரப்பட்ட மக்களை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதன்படி தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதிக்கு இன்று (05.02.2024 - திங்கள் கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலை, காமராஜ் கல்லூரி எதிரில் உள்ள மாணிக்கம் மஹாலில் கோரிக்கை மனுக்களை பெற இருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், தொழிலாளர் நல பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

வருகை தரும் அனைவரும் தங்கள் கருத்துக்களை மனுவாக எழுதிக் கொண்டு வரவும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மதுரையில் 7ஆம் தேதி

# கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## மதுரை மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ.- மு.மணிமாறன் வேண்டுகோள்!

மதுரை, பிப்.5-

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னையில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையை தயாரிக்கும் குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமை கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், சொத்து பாதுகாப்புக் குழுச் செயலாளர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா, வர்த்தக அணி துணை தலைவர் கோவி. செழியன், மாநிலங்களவை கழக உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து தமிழ் நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வரும் 07.02.2024ம் தேதி, புதன்கிழமை காலை 9 மணியளவில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை பாண்டி கோவில் ரிங்ரோடு அருகிலுள்ள துவாரகா பேலஸ் மண்டபத்தில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தொடர்பான கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி. மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

### களக்காடி எல்லப்பன் தலைமையில் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# சைதை - ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் நிகழ்ச்சி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, பிப்,5

சைதை மேற்குப் பகுதி தி.மு.க.சார்பில் 139 வது வட்டம் ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு களக்காடி எல்லப்பன் தலைமையில் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் சைதை மா.அன்பரசன்,மின்னல் கந்தப்பன்,ப. சுப்பிரமணி, தா.மோகன் குமார்,சைதை சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக்,நா.மணிகண்டன்,ஆர்.கிருஷ்ணகுமார், ஆட்டோ கமலநாதன், சை.மூ. சேகர்,எஸ்.பி.கோதண்டம், ஜி.கே.ராமச்சந்திரன்,வி.மதிவாணன்,டி.என்.சிவமணி, கு.கழ்வேந்தன், பொன் ஜெய்சிங், எல்.எஸ்.பழனி, மு.அஜீன், வே.கிஷோர் குமார், சைதை பாஸ்கர்,மு. கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன்,அ.அயாத் பாஷா, சைதை த.மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எ.பாபு நன்றி கூறினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவுநாளையொட்டி நங்கநல்லூர் எம்.ஜி.ஆர். சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஆலந்தூர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராஹிம், மாநில சுற்றுச்சூழல் துறை பிரிவு துணை செயலாளர் சாய் ஜெயகாந்த், வட்ட செயலாளர் ஜெ.நடராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஜெயராம் மார்த்தாண்டன், கவுன்சிலர் சாலமோன் உலகநாதன், ஏசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், வேலவன், சரவணா, வெள்ளைச்சாமி, ரமணா, செல்வம், மதிவாணன், ஸ்ரீகாந்த், சுரேஷ், வேலவன், கேபிள் ராஜா, கே.கே.சண்முகம், மணிகண்டன், குருமூர்த்தி, சதீஷ், ஓவியர் சிவா, மகளிரணி விஜயலட்சுமி, தேவி ஏசுதாஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருமதி பொற்செல்வி இளமுருகு
## பிப்ரவரி 5 (2013)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.**

**தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் “கலைஞர் விருதினை” அளித்து சிறப்பு செய்தார்.**

**“1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**